**செய்தி வெளியீடு எண்: 411** **நாள்: 26.06.2018**

## செய்தி வெளியீடு

ஒரு நாட்டின் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் MSME யின் பங்கு கணிசமான அளவில் உள்ளது. சமூக பொருளாதார முன்னேற்றம் மற்றும் வேலைவாய்ப்புகளை அளித்து, நாட்டின் ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்கு MSME நிறுவனங்கள் பங்களித்து அமைதியை நிலைநாட்டுவதில் முக்கிய அங்கம் வகிக்கிறது. இதனை கருத்தில் கொண்டு ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பின் பொதுச்சபை MSME நிறுவனங்களை அங்கீகரித்து மேலும் ஊக்கப்படுத்தும் விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 27ஆம் தேதி அன்று சர்வதேச MSME நாளாக அறிவித்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழக அரசின் சார்பாக தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னை, ஒவ்வொரு ஆண்டும் இந்நாளை வெகு விமரிசையாக கொண்டாடி, MSME நிறுவங்களின் உரிமையாளர்களை அழைத்து பாராட்டி சிறப்பு செய்து, MSME துறையின் முக்கியத்துவத்தை பற்றி இளைஞர்களிடம் சென்றடைய வழிவகுக்கிறது.

இவ்வாண்டு எதிர்வரும் ஜூன் 27ஆம் தேதி தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சென்னையில் சர்வதேச MSME தினத்தை கொண்டாட முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறது. வரும் 27ஆம் தேதி அன்று சென்னை அண்ணா சாலையில் உள்ள The Raintree ஹோட்டலில் நடைபெறும் இந்நிகழ்வில் பெரும் அளவில் தொழில்முனைவோர்கள், இளைஞர்கள், பெண்கள், பல்துறை வல்லுநர்கள் போன்றோர் கலந்துகொள்ள உள்ளனர். இந்நிகழ்ச்சியில் வெற்றி பெற்று தொழில்முனைவோர்கள், மாணவ கண்டுபிடிப்பாளர்கள், தொழில் வளர்ச்சிக்கு துணைபுரிவோர்கள் ஆகியோரை பாராட்டி கவுரவிக்கப்பட உள்ளது. இந்த சர்வதேச MSME தினத்தை தொடங்கி வைத்து தொடக்க உரை ஆற்ற உள்ளார் திரு. வே.இறைஅன்பு IAS, முதன்மை செயலாளர் / இயக்குனர், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் அவர்கள்.

மேலும் இந்த சர்வதேச MSME தின கொண்டாட்டத்தில் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், IAS, செயலாளர், MSME துறை, முதன்மை உரையும், திரு. ராஜேந்திர குமார் IAS, முதன்மை செயலாளர் மற்றும் ஆனையர், தொழில் மற்றும் வணிகத் துறை இயக்குனரகம் அவர்கள் சிறப்புரையும் ஆற்ற உள்ளனர். இந்நிகழ்ச்சியில் பங்கேற்று MSME வளர்ச்சிக்கு தங்கள் துறைகளின் பங்களிப்பு பற்றி உறையாற்ற செல்வி.அபூர்வா, IAS, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர், SIDCO, திரு. பிரவீன்.P.Nair, நிர்வாக இயக்குனர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மற்றும் திரு.வி. பழநி குமார், IAS, ஆனையர், சுற்றுலா, காலாச்சாரம் மற்றும் அறநிலையத் துறை ஆகியோர் உள்ளனர்.

இது தவிர, Dr.எம்.பாஸ்கரன், துணைவேந்தர், தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம், Dr.C.பாலசந்திரன், துணைவேந்தர், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், Dr.சிவஞானம், தலைவர், திறன் மேம்பாட்டுத் துறை, NIFT-TEA மற்றும் திரு.C.பாபு, தலைவர், டான்சியா போன்ற கல்வியாளர்களும், MSME பிரதிநிதிகளும் கலந்துகொண்டு இத்துறையின் முக்கியத்துவம் மற்றும் வாய்ப்புகள் பற்றியும் எடுத்துரைக்க உள்ளனர். இந்நிகழ்வில் பெருமளவில் மாணவர்கள், இளைஞர்கள், தொழில்முனைவோர் மற்றும் பல்துறை வல்லுநர்கள் கலந்து கொள்கின்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**